# வழக்கறிஞர்கள் கடிதமும் - நீதிமன்றத்துக்கு அழுத்தமும்!

## ( சில வரலாற்று உண்மைகள் )

நீதித்துறைக்கு அழுத்தம் தர முயற்சிப்பவர்களைத் தடுக்க வேண்டும் - என்று கேட்டு உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதிக்கு வழக்கறிஞர் ஹரீஷ் சால்வே உட்பட 600 வழக்கறிஞர்கள் கடிதம் எழுதி, அந்தக் கடிதத்தை ஏடுகளும், ஊடகங்களும் பெரிதாக வெளியிட்டுள்ளன!

“நாடாளுமன்றத் தேர்தல் நெருங்கும்போது, சில சுயநல சக்திகள் நீதிமன்றங்கள்மீது செல்வாக்கு செலுத்துவதும், அழுத்தம் தருவதும் போன்ற அச்சுறுத்தல் நடவடிக்கையை சென்ற தேர்தலின்போது செய்தது போல இன்றும் தொடங்கி உள்ளனர். அரசியல் வழக்குகளில் குறிப்பாக ஊழல் வழக்குகளில் அரசியல் பிரபலங்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளில்; அவர்களின் நிர்பந்த நடவடிக்கைகள் வெளிப்படையாகத் தெரிகிறது”.

- என அந்தக் கடிதத்தைத் துவங்கி, அதனை உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதிக்கு அனுப்பியுள்ளனர்!

இப்படி ஒரு கடிதம் அனுப்பியது உண்மையில் நீதித்துறையின் சுதந்திரச் செயல்பாட்டினை மீட்டெடுக்க வேண்டும் என்ற நல்லெண்ண அடிப்படையில் எழுதப்பட்டிருந்தால் வரவேற்க வேண்டிய ஒன்றே! நீதித்துறைக்குக் கொடுக்கும் அழுத்தங்கள் எந்த மட்டத்திலிருந்தும் தரப்படக்கூடாது; அந்தத் துறை, **‘சமன் செய்து சீர்தூக்குங் கோல்போல’** செயல்பட்டு தனது பணியினை ஆற்றிட அனைத்துத் தரப்பிலிருந்தும் ஒத்துழைப்புத் தரவேண்டும்; அதே நிலையில் நீதித்துறையும் அழுத்தங்களைப் புறந்தள்ளி நெறி தவறாது செயல்பட வேண்டும் என்பதிலும் யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது!

இந்தச் சூழலில் உச்சநீதி மன்ற வழக்கறிஞர்கள் 600 பேர் சேர்ந்து எழுதிய கடிதம் தவறான செயல் என்று கூற முடியாது! ஆனால் அவர்கள் எழுதிய கடிதம் - தலைமை நீதிபதியின் பார்வைக்கு மட்டும் சென்றிருந்தால் எழுதியவர்களது நல்லெண்ணம் உறுதிப்பட்டிருக்கும். அதனை ஊடகங்களுக்கு செய்தியாகத் தந்து அதன் மூலம் பொது வெளியில் வெளிச்சம் போட்டுக் காட்டியிருப்பது, எழுதியவர்களின் எண்ணத்தில் சந்தேகத்தை விதைக்கிறது. இந்தக் கடிதமும் நீதித்துறைக்குத் தந்த மற்றொரு அழுத்தமாகவே பலராலும் கருதப்படுகிறது.

**இந்தக் கடிதத்துக்கு உடனடியாக ஆதரவு தெரிவித்து பிரதமர் மோடி ‘டிவிட்’ செய்திருப்பது, அதனை உறுதிப்படுத்துவதாகவும் அமைந்துள்ளது.**

**“கடந்த காலம்தான் நீதிமன்றங்களின் பொற்காலம் என்றும் தற்போது அதற்கு முரணான நிலைமை காணப்படுவதாகவும் தவறான தோற்றத்தை (சிலர்) உருவாக்க முயற்சிக்கிறார்கள். அதன் மூலம் தங்களது அரசியல் ஆதாயத்துக்காக நீதிமன்றங்களை சங்கடத்துக்குள்ளாக்குகிறார்கள்”** - என்று அந்த 600 வழக்கறிஞர்கள் தங்கள் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தக் கடிதம் எழுதிய வழக்கறிஞர்கள் ஒன்றை நினைவுகூரத் தவறிவிட்டனர்! **நீதித்துறை குறித்து முரணான நிலை எப்போது உருவானது; எந்த (ஆட்சி) காலத்தில் இந்த முரணான நிலை வெடித்தது** என்பதையும் வெளிப்படுத்தியிருந்தால் அந்த வழக்கறிஞர்களின் கடிதம் அர்த்தமுள்ளதாக இருந்திருக்கும்.




இந்திய நீதித்துறை வரலாற்றிலேயே இல்லாத வகையில் உச்சநீதிமன்றத்தின் மூத்த நீதிபதிகள் நான்கு பேர் செய்தியாளர்களை வெளிப்படையாகச் சந்தித்து - தங்களது மனவேதனைகளை வெளிப்படுத்திய போதே, இந்திய நீதித்துறையின் பொற்காலம் கேள்விக்குறியாகி விடவில்லையா? அவர்கள் செய்தியாளர் சந்திப்பின்போது, அரசியல் அழுத்தங்களுக்கு நீதித்துறை தலைசாயத் தொடங்கி விட்டதோ என்ற அச்சத்தை மறைமுகமாக வெளிக்காட்டினரே; அந்தச் செய்தியாளர் சந்திப்பு நடந்த காலம், பா.ஜ.க. இந்த நாட்டை ஆளும் காலமல்லவா? 600 வழக்கறிஞர்கள் கடிதத்துக்கு உடனடியாக ஆதரவு தெரிவித்துள்ள அதே பிரதமர் மோடி தலைமையில் நடக்கின்ற ஆட்சி நடக்கும் காலம்தானே!

**“இந்திய நீதித்துறையின் சுதந்திரச் செயல்பாடுகளும், ஜனநாயகத்தின் எதிர்காலமும் அபாயக் கட்டத்தில் உள்ள நிலையில் (நாட்டை நோக்கி) இந்த அமைப்புகளைக் காப்பாற்றுங்கள் என்று கேட்டுக்கொள்வதைவிட வேறு எந்த வழிமுறையும் தென்படவில்லை.”**

-என இந்த நாட்டின் உச்சநீதிமன்றத்தின் மூத்த நீதிபதிகள் நான்கு பேர் வெந்து - நொந்து கேட்டுக் கொண்டார்களே; அது நீதித்துறையில் அழுத்தங்கள் உருவாகத் தொடங்கியதினை சூசகமாக வெளிப்படுத்திய நிகழ்வு அல்லவா?



சொராபுதீன் மற்றும் அவரது மனைவி

**“உச்சநீதிமன்றத்தின் நிர்வாகம் ஒழுங்கு முறையில் இல்லை. கடந்த சில மாதங்களாக பல விரும்பத்தகாத நிகழ்வுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன”.**

(The administration of the Supreme Court is not in order. Many things Undesirable are happened in the few months)

- இதுவும் உச்சநீதிமன்ற மூத்த நீதிபதிகளின் குமுறல்தான்! உச்சநீதிமன்ற நீதிபதிகளின் **‘அசாதாரண’** செய்தியாளர் சந்திப்பு என்று வருணிக்கப்பட்டு, நாட்டையே திடுக்கிடவைத்த அந்த நிகழ்வுக்குக் காரணமாக கூறப்பட்டது, சொராபுதீன் ஷேக் என்கவுண்டர் வழக்கை விசாரித்து வந்த சிறப்பு சி.பி.ஐ. நீதிபதி பி.எச். லோயா மர்மமான முறையில் மரணம் அடைந்ததாகக் கூறப்படும் வழக்கை உச்சநீதிமன்றம் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்ட நிலையில், இந்த நீதியரசர்களின் செய்தியாளர் சந்திப்பும், அதில் தெரிவிக்கப்பட்ட கருத்துகளும் முக்கியத்துவம் நிறைந்ததாக அன்று பல தரப்பாராலும் கருதப்பட்டது.

**என்ன அந்த நீதிபதி லோயா வழக்கு? அன்று பரபரப்பாக ஊடகங்களில் பேசப்பட்ட வழக்கு; இன்று பலருக்கும் மறந்திருக்கும்! மக்கள் மறதியில் குளிர்காய நினைக்கும் கூட்டம்தானே மோடி, அமித்ஷா கூட்டம்; அதனால்தானே அந்த தில்லு முல்லு இரட்டையர்கள் மக்களை ஏமாற்றும் தில்லாலங்கடி அரசியலை தொடர்ந்து நடத்தி வருகின்றனர்! இப்போது லோயா வழக்கை சிறிது நினைவு கூர்வோம்!**

மோடி குஜராத்தின் முதலமைச்சராகவும், அமித்ஷா அம்மாநில உள்துறை அமைச்சராகவும் இருந்த காலகட்டமது! அப்போது அந்த மாநிலத்தைச் சேர்ந்த சொராபுதீன் ஷேக் என்பவருக்குத் தீவிரவாதிகள் தொடர்பு இருப்பதாகவும், பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களைக் கொலை செய்ய திட்டமிட்டுள்ளார் என்றும் கூறி, அவரை குஜராத் தீவிரவாத தடுப்புக் காவல்துறையினர் கைது செய்தனர். பின்னர் போலீஸ் நடத்திய என்கவுண்டரில் அவரை சுட்டுக் கொன்றனர். அடுத்த சில தினங்களில் சொராபுதீன் ஷேக்கின் மனைவியும் போலீசாரால் சுட்டுக்கொல்லப்பட்டார். பின்னர் சொராபுதீனின் உதவியாளரும் சுட்டுக்கொல்லப் பட்டார்!

இந்தக் கொலைகளை விசாரித்த சி.பி.ஐ., அந்த மூன்று கொலைகளிலும் அன்றைய குஜராத் உள்துறை அமைச்சர் அமித்ஷாவுக்கும் தொடர்பு இருப்பதாக அவரைக் கைது செய்தனர். பின்னர் மூன்று மாத சிறை வாசத்துக்குப் பின் அவர் ஜாமீனில் விடுதலையானார். சி.பி.ஐ. நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்று வந்தது. ‘பி.ஜே.பி. அரசு டெல்லியில் மோடி தலைமையில் 2014 மே மாதம் அமைந்தது!



அமித்ஷா – கைது செய்யப்பட்டு சி.பி.ஐ. நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படும் காட்சி!

அமித்ஷா மீதான சி.பி.ஐ. நீதிமன்ற வழக்கில், அமித்ஷாவின் சார்பில் வாதாடிய வழக்கறிஞர்கள் வாதத்தினை ஏற்று, ‘அமித்ஷா மீது அரசியல் நோக்கோடு தொடரப்பட்ட வழக்கு’ என்று வழக்கை முடித்துவைத்தது. அமித்ஷா விடுதலையானார். அன்றைய பி.ஜே.பி. தலைவரான அமித்ஷா விடுதலையைத் தொடர்ந்து சி.பி.ஐ. அந்த வழக்கில் மேல் முறையீடு செய்யவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது!

அமித்ஷா உள்ளிட்டோர் மீது விசாரணை நடத்தும் சி.பி.ஐ. தனி நீதிமன்றத்துக்கு நீதிபதியாக லோயா அமர்த்தப்படுவதற்கு முன் நடந்த பல நிகழ்வுகள் சிந்திக்க வேண்டியவை. பி.ஜே.பி. தலைவர் அமித்ஷா உள்ளிட்டோர் மீதான சொராபுதீன் என்கவுண்டர் வழக்கை சி.பி.ஐ. தனி நீதிமன்றத்தின் நீதிபதி உத்பத் (UTPAT) விசாரித்து வந்தார். மேற்கண்ட வழக்கில் இருந்து தன்னை விடுவிக்கக்கோரி அமித்ஷா அளித்த மனுமீது தீர்ப்பு வழங்குவதாக தனி நீதிமன்ற நீதிபதி உத்பத் அறிவித்திருந்த தேதிக்கு முதல் நாள் அந்த நீதிபதி மாற்றப்படுகிறார்.



## சிலந்தி

சொராபுதீன் வழக்கை விசாரிக்கும் நீதிபதியை வழக்கு முடியும் வரை மாற்றக் கூடாது என்று உச்சநீதிமன்றம் அறிவுறுத்தியிருந்ததும் இங்கே கவனிக்கத்தக்கது. பி.ஜே.பி.யின் அன்றைய தலைவர் அமித்ஷா, இந்த வழக்கு விசாரணைக்கு நீதிமன்றத்தால் அனுப்பப்பட்ட சம்மனை பலமுறை தவிர்த்து வந்ததை நீதிபதி உத்பத் சுட்டிக்காட்டிக் கடுமையாகக் கண்டித்தார் என்பதும் அப்போது ஊடகங்களில் வந்த செய்தி!

இப்படிப்பட்ட சூழல்கள் சூழ்ந்திருந்த நேரத்தில் நீதிபதி உத்பத் மாற்றப்பட்டு அவரது இடத்துக்கு நீதிபதி லோயா வருகிறார். லோயாவும், அமித்ஷா தொடர்ந்து சம்மன்களை ஏற்று நீதிமன்றத்துக்கு வருவதைத் தவிர்ப்பதை சுட்டிக்காட்டி தனது வருத்தத்தை வெளிப்படுத்தி, அடுத்த வாய்தாவுக்கு (அதாவது டிசம்பர் 15) அவரை கோர்ட்டில் உறுதியாக ஆஜர்படுத்த வேண்டும் என்று தெரிவிக்கிறார்.



நீதிபதி லோயா

அமித்ஷா மீதான வழக்கு விசாரணை இந்த நிலையில் இருக்கும் போது, நீதிபதி லோயா, சக நீதிபதி ஒருவரின் இல்லத் திருமணத்திற்குச் சென்றபோது அங்கு மரணமடைகிறார்.

இந்த நிகழ்வு நடந்தது 2014ஆம் ஆண்டு டிசம்பர் 1-ஆம் தேதி.

பின்னர் நீதிபதி லோயாவின் மரணத்தின் காரணமாக புதிய நீதிபதி நியமனமாகிறார். அந்த நீதிபதி அமித்ஷாவை வழக்கிலிருந்து விடுவிக்கிறார்.

சி.பி.ஐ.யும் இந்த வழக்கினை மேல்முறையீட்டுக்கு எடுத்துச் செல்லவில்லை!

முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுவிட்டதாக நினைத்து பலர் நிம்மதிப் பெருமூச்சு வெளியிட்ட நிலையில், நீதிபதி லோயாவின் சாவில் மர்மம் உள்ளது என்று பிரேத விசாரணை அறிக்கை உள்ளிட்ட பல விவகாரங்களில் சந்தேக வினாக்கள் பல அடுக்கடுக்காக எழுந்தன! இந்த வினாக்களைத் தொடர்ந்து, பொது நல வழக்குகள், மகாராஷ்டிரா உயர்நீதிமன்றத்திலும், உச்சநீதிமன்றத்திலும் தொடரப்பட்ட நிலையில் - எல்லா வழக்குகளையும் உச்சநீதி மன்றம், அன்றைய தலைமை நீதிபதி தலைமையில் மேலும் இரு நீதிபதிகளை இணைத்துக்கொண்டு அந்த மூன்று நீதிபதிகள் அமர்வால் விசாரிக்கப்படும் என அறிவித்தது!

**இந்த வழக்கு விசாரணை நிலுவையில் உள்ள நிலையில்தான் உச்சநீதிமன்றத்தின் மூத்த நீதிபதிகள் நான்கு பேர் செய்தியாளர்களைச் சந்தித்து- உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதியின் செயல்பாடுகளை விமர்சித்தனர். அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த வழக்குகளில் ‘பெஞ்ச்’ (அமர்வு) கள் நியமிக்கும்போது மூத்த நீதிபதி களைக் கொண்டதாக அந்த அமர்வு இருக்கவேண்டும் என்ற நடைமுறைகள் புறக்கணிக்கப்படுவதாக அவர்கள் குறிப்பிட்டனர்!**

**வெளி அழுத்தங்களின் காரணமாக இப்படிப்பட்ட மரபுக்கு மாறான நிகழ்வுகள் நீதித்துறையில் நடக்கிறது என வெளிப்படையாக அந்த நான்கு மூத்த நீதிபதிகளும் கூறாவிட்டாலும் அத்தகைய பொருள் அதனுள் புதைந்திருப்பதாகவே பலராலும் கருதப்பட்டது!**

இப்போது, 600 வழக்கறிஞர்கள் கையொப்பமிட்டு தலைமை நீதிபதிக்கு அனுப்பிய கடிதத்திற்கு வருவோம்!

அவர்கள் அனுப்பிய கடிதத்தில், ‘நாடாளுமன்றத் தேர்தல் நெருங்கும்போது சில சுயநல சக்திகள், நீதிமன்றங்கள் மீது செல்வாக்கு செலுத்தவும், அழுத்தம் தருவதுமான அச்சுறுத்தல் நடவடிக்கைகளைத் தொடங்கி உள்ளதாகக் குறிப்பிட்டிருப்பதற்கு - முழு முதல் காரணமாக இருந்தது - இருப்பது பா.ஜ.க. ஆட்சிதான் என்பதையும் அந்த வழக்கறிஞர்கள் அறிந்திராமல் இருக்க முடியாது. இருந்தும் அந்தக் கடிதத்தில், நீதித்துறைக்கு அழுத்தங்கள் தர தேர்தல் நேரத்தில் மட்டும் சிலரால் செய்யப்படுகிறது என்று குறிப்பிட்டிருப்பது - அந்த வழக்கறிஞர்கள் கடிதத்தின் நோக்கத்தில் சந்தேகத்தை உருவாக்குகிறது’.




ஜனநாயகத்தைத் தாங்கி நிற்கும் முக்கியத் தூண்களில் ஒன்று நீதித்துறை. மற்ற தூண்களில் பழுது உருவாகினாலும் - அதனைச் சரி செய்ய நீதித்துறை ஒன்றையே நாடு நம்பியுள்ளது. அந்த நீதித்துறையும், பா.ஜ.க. ஆட்சியில் தலைகுனிவுகளைச் சந்திக்கும் வகையில் பலவித அழுத்தங்களுக்கு ஆட்பட்டு விமர்சன ங்களுக்கு ஆளாகின்றன! வரலாற்றிலேயே இல்லாத சம்பவங்கள் - வெடிக்கும் நிலை உருவாகி வருகின்றன!

அரசியல் தொடர்புடையவர்கள் கைது செய்யப்பட்டு அவர்களுக்குப் பிணை (Bail) கோரும் வழக்குகளில் பலவித நிலைப்பாடுகளை சில நீதிமன்றங்கள் எடுப்பது, சில அழுத்தங்கள் காரணமானதாகவே என்பது வெளிப்படையாகத் தெரிய ஆரம்பிப்பது மட்டுமின்றி - பொது வெளியில் அவைகள் விமர்சிக்கப்படுவதும் நீதி மன்றங்களின் மேல் மக்களுக்குரிய நம்பிக்கையைத் தகர்க்கும் வகையிலேயே பல நேரங்களில் அமைந்து விடுகிறது என்பதையும் மறுத்திட இயலாது.

**இந்த நிலை தொடர்ந்தால் இந்திய ஜனநாயகம் சவக்குழிக்குச் சென்று விடும் என்பதை நாடு உணர்ந்திட வேண்டும்! பாரதிய ஜனதா ஆட்சிக்கு முடிவு கட்டாவிட்டால், இந்திய ஜனநாயகம் வரலாற்றில் ஒரு நினைவுச் சின்னமாகி விடும்!**

**அந்த நிலை ஏற்படாது தடுத்து நிறுத்திட, வரும் தேர்தலில் பா.ஜ.க.வை வீழ்த்தியே ஆகவேண்டும்; உறுதி ஏற்போம்!**